செ.வெ. எண்: 36 நாள்: 13,01,2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆவின் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் / பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 27,127 பணியாளர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2012–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் 6127 தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கும் மற்றும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் / பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 21,000 தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இதனால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சுமார் ரூபாய் 61.27 இலட்சமும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் / பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுக்கு சுமார் ரூபாய் 210 இலட்சம் செலவாகும். இதன் மூலம் ஆவின் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் / பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 27,127 பணியாளர்கள் பயனடைவார்கள்.

2012 பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்த ஊக்கத் தொகையை பணியாளர்களுக்கு உடனடியாக வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**